# ராஜீவ்-ஜே.ஆர். டிசம்பர் 4-ல் டில்லியில் சந்திப்பு
# லலித் இம்மாதம் 18-ல் ஓமானில் சந்திப்பார்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

மலர் 2 9-11-85 சனிக்கிழமை (ஐப்பசி 24 வைகாசி 25) முழக்கம் 275

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜனுதிபதி ஜெயவர்த்தனுவும் டிசம்பர் மாதம் 4.ஆம் திகதி புதன்கிழமை டில்லியில் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்பது இப்போது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் ஐந்தாம், ஆறும் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெறும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் செல்லும் வழியிலேயே ஜனுதிபதி டில்லியில் நான்காம் திகதி தரித்து நின்று இப்பேச்சுவார்த்தைகளை நடத்துவாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது. டில்லியில் நடைபெற்ற தமிழீழக் குழுக்கள் பண்டாரியுடனு பேச்சுவார்த்தைகள் டிசம்பர் மாதம் நடுப்பகுதி வரைக்கும் ஒத்தி வைக்கப்படலாமெனத் தெரியவந்துள்ளது. இதற்கிடையே தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இம்மாதம் பதினெட்டாம் திகதி திங்கட்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஓமானின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக இருவரும் அங்குசெல்லவுள்ளனர். இச் சந்திப்பு ஓமானில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

★ தமிழீழக் குழுக்களிடம் ரமேஷ் பண்டாரி தெரிவித்தார்

# வடக்கும் கிழக்கும் இணைவதை
# ஜனுதிபதி நிராகரித்துவிட்டார்!

## இரு மாகாண சபையே ஆகக்கூடியதாம்; ஏற்கமுடியாதென பிரதிநிதிகள் அறிவிப்பு

(புதுடில்லி)

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் கோரிக்கையை ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு நிராகரித்து விட்டதாக பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி நேற்று முன்தினம் புதுடில்லியில் தம்மைச் சந்தித்த தமிழீழக் குழுக்களின் தலைவர்களிடம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியான இரண்டு மாகாண சபைகளுக்குக் கூடுதலான எதனையும் வழங்கமுடியாதென்பதில் இலங்கை அரசாங்கம் மாற்றமெதுவுமின்றி இருப்பதாக ஜனுதிபதி தெரிவித்ததாகத் திரு. பண்டாரி தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பரவலாக்கல் ஆரம்பமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கவேண்டும் என்ற தமிழர் அமைப்புகளின் கோரிக்கையை ஜெயவர்த்தனு நிராகரித்து விட்டார் என்று திரு. பண்டாரி தம்மிடம் தெரிவித்ததாக தமி

...6ம் பக்கம் பார்க்க

## மொரவேவா தாக்குதலில் ஆறு குழந்தைகள் மரணம்

மொரவேவாவிலுள்ள கோமரகந்தவெல என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் மரணமான பன்னிரண்டு பேரில், ஆறுபேர் சிறு குழந்தைகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மிகுதி அறுவரில் இருவர் பெண்களாவர். மிகுதிப்பேர் அந்தப் பகுதிக் குடியேற்ற வாசிகளாவர்.

இவர்களிருந்த வீடுகள் தீமூட்டி எரிக்கப்பட்ட பின்னர், இவர்கள் வீட்டைவிட்டு வெளியேறி ஓடும்போது, துரத்தித் துரத்திச் சுடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

—6ஆம் பக்கம் பார்க்க

## முகாம் பாதைத் தடை நீக்கம்

நேற்று முன்தினம் நாவற்குழி இராணுவ முகாம் முன்னுல் போடப்பட்டிருந்த போக்குவரத்துத் தடை நேற்று நீக்கப்பட்டது.

## டில்லி பேச்சு ஒத்திவைப்பு; குழுக்கள் நாளை திரும்பும்!

டில்லியில் திரு. ரமேஷ் பண்டாரிக்கும், தமிழீழக் குழுக்களுக்குமிடையே 2 நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தை சோர்வு நிலை கண்டதால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சென்னைக்குக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு தனது நிலையிலிருந்து விடுபடாததினுலும், தமிழீழக் குழுக்கள் மாற்று யோசனை அறிக்கையைச் சமர்ப்பிக்க மறுத்து வருவதாலும், பேச்சுக்கள் உடனடியாக தொடரக்கூடிய சாத்திய

—6ஆம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு மட்டுநகர் செல்கின்றது

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அடுத்த வாரம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளது.

வாகரை, கிரான், வெல்லாவெளி, காத்தான்குடி, ஆரையம்பதி, செங்கலடி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் யுத்த நிறுத்தக் காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி நேரடியாக விசாரணை நடத்தவே அங்கு செல்லவுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து மீண்டுமொரு தடவை குழு திருமலைக்குச் செல்லலாம். கடந்த வாரத்தில் இங்கு இடம்பெற்ற புதிய சம்பவங்களை விசாரிக்கவே குழு அங்கு செல்லும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை

— 6-ம் பக்கம் பார்க்க

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு

## பாதிப்புற்ற திருமலை மாணவர் யாழ்நகரில் தோற்ற வசதி

திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து தமது பாடசாலைக்குத் திரும்பிச் சென்று பரீட்சை எடுக்க முடியாதிருக்கும் மாணவர்கள் க. பொ. த. (சா/த) பரீட்சையை யாழ். மாவட்டத்தில் ஒரு விசேட பரீட்சை நிலையத்தில் எழுதுவதற்கான நடவடிக்கை யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமான செய்தி

—6ஆம் பக்கம் பார்க்க

## ‘ரெலோ’ விடுத்துள்ள அறிக்கை: “அப்பாவிகளே படுகொலை”

## முழங்காவில், கோட்டை வாசலில் கொலை செய்யப்பட்டோர் எமது உறுப்பினரல்ல!

“அண்மையில் முழங்காவில் ரெலோ முகாம் ஒன்று இராணுவத்தினுல் பிடிக்கப்பட்டு பத்துப்பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என பத்திரிகைகளில் ஓர் செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில் இறந்தவர்கள் அப்பாவிப் பொதுமக்களே, அத்துடன் கொட்டடியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரும் யாழ். கோட்டைக்கு முன் சுடப்பட்டு இறந்தபோது இவரும் ரெலோ என இவ் அரசு கூறியது. நாம் இதனை முற்ருக மறுக்கிறேம். பாசிச வெறி

...6ஆம் பக்கம் பார்க்க

கவனிப்பார் எவருமில்லாத நிலையில்

## வட பகுதியில் பாணின் நிறையில் மோசடி அதிகரிப்பு; தரமும் குறைவெனப் புகார்!

வட பகுதியில் பல இடங்களில் தரமோது விற்பனையாகும் பாணின் தரம், நிறை, அளவு என்பன குறைவாக இருப்பதாக புகார்கள் செய்யப்படுகின்றன. மழை காலமானதால் பாணுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் இந்த வகையான பாணை வாங்க வேண்டியுள்ளது.

தற்போதுள்ள நாட்டு நிலைமையை தமக்கு சாதகமாக்கி கொண்டு சில பேக்கரிகள் இவ்வாறுன பாணைத் தயாரிக்கின்றன. முன்பு இந்த பேக்கரிகள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திடீர் விஜயம் செய்து இந்த மோசடிகளைக் கண்டு பிடிப்பதுடன் சட்ட நடவடிக்

...6ம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடிக்கு ஒருவர் காயம்

[மட்டுநகர்]

வெல்லாவெளியில் வக்கியல்ல என்ற இடத்தில் நேற்

...6ம் பக்கம் பார்க்க

## பரந்தன் சம்பவம்

பரந்தனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் ஆயுதப் படையினரில் ஒருவர் காயமடைந்ததாகவும்

...6-ம் பக்கம் பார்க்க

தமிழ் பேசும் மக்களின் அபிமானம் பெற்ற ஈழமுரசு

வரிவிளம்பரம்

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 22, கன்ஞ வட்டி வீதி, சத்தியா அன் கோ அவர்களிடம் 31-5-1983 தொடக்கம் 25 - 10 - 1984 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 29-11-1985 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அதே அடைவுகடையில் வைத்து என்னல் விற்கப்படும். வி. செ. குட்டிப்பிள்ளை, ஏல விற்பனையாளர், வண்ணர்பண்ணை.

---

## அரியாலை சங்கத்தின் முன்மாதிரி

(சுண்டுக்குளி)

கிராமிய, கல்வித்துறை முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் மேற் காண்டு வருகின்றது. அரியாலை நாவலடி விஷ்ணு சிறுவர் பாடசாலையில் கடமையாற்றும் இரு ஆசிரியைகளுக்கான ஒரு வருடச் சம்பளத்தை வழங்க இச்சங்கம் முன் வந்துள்ளது. சங்க அங்கத்தவர், பணியாளர்களின் வேதனத்திலிருந்து திரட்டப்படும் நிதியிலிருந்து இச்சிறுவர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஒரு வருட சம்பளமும் மாதந்தோறும் வழங்கப்படுமென்று அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. த. சிவலிங்கம் தெரிவித்தார்.

அரியாலை ஸ்ரீ பார்வதி பாடசாலையின் நீண்டகாலக் குறைபாடடைப் போக்கும் முகமாக இச்சங்கம் இதுவரை காலமும் பாதுகாப்பற்றுக் கிடந்த பாடசாலைக்கு 5000 ரூபா செலவில் 50 அடி நீளமுள்ள சுற்றுச் சுவரைக் கட்டிக் கொடுத்துள்ளது.

## திருநெல்வேலி
# செங்குந்த இந்துக் கல்லூரி; இவ்வருடம் பொன் விழா

(கல்வியங்காடு)

''எமது மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்காக கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை நவீனமயமாக்கவும், அவர்களின் கலைத்திறனை வளர்ப்பதற்குக் கலை அரங்கு ஒன்றைக் கட்டி முடிப்பதற்கும், கல்லூரியின் ஐம்பதாவது ஆண்டு பொன் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கும், கடந்த ஆண்டு எமது பாடசாலை அபிவிருத்தி சங்கம் தீர்மானித்திருந்தது. ஆனல், நாட்டின் சூழ்நிலை அவற்றுக்கு இடம் கொடுக்கவில்லை. இந்த ஆண்டிலாவது இவற்றை செய்து முடிப்பதற்கு ஆண்டவன் எமக்கு அருள் பாலிக்க வேண்டும். பெற்ரோர், ஆசிரியர், மாணவர் மற்றும் அன்பர்கள் ஒன்று கூடி எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். சிறு பாடசாலையாக ஆரம்பித்து கல்லூரியின் அந்தஸ்துக்கு உயர்ந்து ஐம்பதாவது ஆண்டைக் கடந்துருக்கும் எமது கல்லூரியில் கற்றவர்கள் பலர் இன்று பெரும் அறிவாளிகளாக நல்ல இடங்களில் ஒளி விட்டுப் பிரகாசிப்பதைப் பார்க்கும் போது பெருமிதமாக இருக்கிறது தொடர்ந்தும் இக்கல்லூரி சிறந்த முறையில் இயங்கி பல நூற்ருண்டுகளைக் காணவேண்டும் என விரும்புகிறேன்.''

இவ்வாறு திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பெற்ரோர் ஆசிரியர்கள் கலந்து கொண்ட அபிவிருத்தி சங்கக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போது கல்லூரி அதிபர் திரு. பி. சுவாமிநாத சர்மா தெரிவித்தார். கல்லூரி இசையாசிரியையின் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்; திரு. பி. சுவாமிநாத சர்மா (அதிபர்) உப தலைவர்: திரு. ம. சண்முகலிங்கம் (சிரேஷ்ட ஆசிரியர்) செயலாளர்: திரு. ச. சபாரத்தினம் பொருளாளர்: திரு. சீ. அமரேசன் (ஆசிரியர்) உறுப்பினர்கள்; திரு மு. பரமேஸ்வரன் (ஆசிரியர்) திரு. சி முத்துத்தம்பி (ஆசிரியர்) திருமதி சு. தம்பிப்பிள்ளை (ஆசிரியை) திரு. ப. செல்வராசா திரு. வி. கணேஷ்திரு. செ. சுந்ரலிங்கம் திரு. ப. நமசிவாயம் திரு. இ. பேராயலிங்கம், திருமதி. ரூ. இராசரத்தினம் (ஆசிரியை) திருமதி. ஈ. சண்முகலிங்கம் திருமதி நீ. மகாலிங்கம், கணக்குப் பரிசோதகர்கள்: திரு என். கே குலசிங்கம், திருமதி. க. கிட்ணர் நலன்விரும்பிகள்: திரு. அ. கோபாலரத்தினம் (தபால் திபர்), திரு. க. சண்முகநாதன் செயலாளர் திரு. ச. சபாரத்தினம் நன்றியுரை கூறினர்.

## ஆதீனத்தில் ஸ்கந்தஷஷ்டி சொற்பொழிவு

நல்லை ஆதீனத்தில் ஸ்கந்தஷஷ்டி தினங்களில் பிற்பகல் மூன்று மணிமுதல் நான்கு மணிவரை அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைதியநாதன் அவர்கள் பின்வரும் தலைப்புக்களில் சொற்பொழிவாற்றுவார். 13-ம் திகதி புதன்கிழமை - கந்தபுரி தழைய வருகந்தன்; 14-ம் திகதி வியாழன் – செந்தின் மேய சேவகன்; 15-ம் திகதி வெள்ளி – மாவை வளர் வேலவன்; 16-ம் திகதி சனிககிழமை திருமலை அருட குமரன்; 17-ம் திகதி ஞாயிறு - சேயூர் மேய செவ்வேள்.

## நிர்வாகிகள் தெரிவாகினர்

(பரந்தன்)

தருமபுரம் நெத்தலியாறு ஸ்ரீ முத்திவநாயகர் ஆலயத்திற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் நித்திய பூசை நடைபெற நிர்வாகசபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நிர்வாகசபையின் விபரம்:- தலைவர்: செ. புஷ்பராசா, உப-தலைவர்: கா. மயில்வாகனம், செயலாளர்: ஆ. சித்திரவேல், பொருளாளர்: மு. சின்னையா, இணைச்செயலாளர்: க. கந்தையா, நிர்வாக உறுப்பினர்: சோ. தியாகராசா, அ. சண்முகம், மு. கணேசமூர்த்தி, ம. இராசையா, நா. இராஜதாஸ், இ. இராசையா ஆகியோர்.

## இணக்கசபை உதயம்

(பூநகரி)

பூநகரி மட்டுவில்நாடு கிராம சேவையாளர் பிரிவில் பொது மக்களினுல் தம் சிறு பிரச்சினை, சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள இணக்க சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிரதி ஞாயிறு தோறும் சபை கூடி மக்களின் குறைபாடுகளை ஆராயவுள்ளது. தலைவராக ச. ஆ. சதாசிவம்பிள்ளையும், செயலாளராக ந. பாலசுப்பிரமணியமும், பொருளாளராக வி. நந்தகோபாலும் ஆறுபேர் கொண்ட நிர்வாக உறுபபினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



✱ அரியாலை. அருமைநாயகம் ஜெகதீஸ்வரி தம்பதியின் பிள்ளைகள் அருள்ராஜ், அருள்தாஸ் இன்று முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்கள்.

✱ ஊர்காவற்றுறை, திருச்செல்வம் வாசுகி தம்பதியின் மகன் வாகீசன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

✱ கோண்டாவில், அருள்சாகரன் ரூபராணி தம்பதியின் மகன் பிருந்தன் இன்று இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ முள்ளியவளை, இலட்சுமி காந்தன் இரஞ்சினிதேவி தம்பதியின் மகள் மேனகா மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

✱ நீர்வேலி, தயாநிதி கலைச்செல்வி தம்பதியின் மகன் தனஞ்செயன் தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ சிலாவத்தை, ஆரோக்கிய நாதர் அந்தோனியம்மா தம்பதியின் மகள் பிறஸ்லின் ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ யாழ். மணிக்கூட்டு வீதி, பாலசிங்கம் கிருஷ்ணபலானி தம்பதியின் புதல்விகள் சலுஜா, ஜெலூஜா இன்று எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்கள்.

✱ ஊர்காவற்றுறை, யாக்கோப்பு அமலதாஸ் ராசேஸ்வரி தம்பதியின் மகன் சகாய இந்திரன் தனது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

✱ கொடிகாமம், வேலையா கனகம்மா தம்பதியின் மகள் யசோதா இன்று இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ கச்சேரி கிழக்கு, ரட்ணராஜா இராஜலட்சுமி தம்பதியின் மகள் சிறீரஞ்சனி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

## பிறந்த தின வாழ்த்து



## செல்வி காயத்ரி

வல்வெட்டித்துறை முருகையன் கோவிலடியைச் சேர்ந்த துரை. குகதாஸ் சுமதி (பவானி) தம்பதிகளின் செல்வப் புதல்வி காயத்ரி தனது முதலாவது பிறந்த நாளை அமைதியாக தனது இல்லத்தில் இன்று (9 11-1985) சனிக்கிழமை கொண்டாடுகிருர்.

இவரை அலைகடலில் அரும்பொருள் தேடும் அப்பாவும், அன்புமிகு அம்மாவும் மற்றும் உறவினர்களும், உற்ருரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்


## மில்க்வைற் சலவைப் பவுடர்




துரித சலவைக்கு நுரைவளம் மிகுந்த மில்க்வைற் சலவைப்பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.
56 கிராம் பைக்கற் ரூ. 2/- மட்டுமே.
10 மேலுறைகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
— மில்க்வைற் - யாழ்ப்பாணம்


## 6-ம் மாத நினைவு அஞ்சலி



**சாந்தகுமார் (தேவு)**

ஆண்டவன் படைப்பு:-
13-09-1963

ஆள்பவன் அழிப்பு:-
13-05-1985

ஆள்பவன் கைகளில் சிக்கியே மாண்டாய்; எதற்காக?
தமிழின வாழ்வின் இலட்சியத்திற்காகவா?

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்புத் தாய், அக்காமார், அண்ணமார், நண்பர்கள்.


## பேராதனைப் பல்கலைக்கழக வெளிநிலைப் பரீட்சை

**G. A. Q — 1986 ஏப்ரல்**

மீட்டல் — வினுவிடை வகுப்பு

பொருளியல்

S. வரதராஜன், B. A. (HONS)

ஆரம்பம் 16-11-1985 சனி 1.30 p. m. (1978 — 1985 வரையிலான பரீட்சை வினுவிடைப் புத்தகம் வழங்கப்படும்.)

குறிப்பு:- குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டுமே இடவசதி உள்ளமையினுல் முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

விபரங்கட்கு:

**பொருளியல்கல்வி நிலையம**

200, பிரதான வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென். ஜோன்ஸ் கல்லூரி அருகே)

## தென்மட்டுவில் விழாப் பேச்சு

# தாய்சேய் நலம் பேணல் மிகவும் அத்தியாவசியம்

(சாவகச்சேரி)

"அரசாங்க நிதியை எதிர்பார்த்தால் எமது ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையங்கள், திறப்பு விழாவைத் தொடர்ந்து மூடு விழாவையும் செய்ய வேண்டிய அபாய நிலைதான் உருவாகலாம். எனவே கிராமிய மக்களுக்காக இயங்கும் இந்நிலையத்தில் மருந்து பெறுவோரிடம் சிறு சிறு அன்பளிப்புப் பெற்றுக் கொண்டால், ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையம் தொடர்ந்து மக்களுக்கான மக்கள் நிலையமாக இயங்கும்."

இவ்வாறு வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ், ஜே. பி. தென் மட்டுவிலூர் வேரற்கேணியில், மாதர் மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கூறினர்.

தென்மட்டுவிலூர் ஆரம்ப சுகாதார குழுத் தலைவர் திரு. சி. பொன்னுத்துரை ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், வைத்திய கலாநிதி க. நல்லையா சம்பிரதாய பூர்வமாக நிலையத்தைத் திறந்து வைத்தார்.

மக்கள் சுகாதாரப் பரிசோதகர் திரு. பொன் சிவப்பிரகாசம் பேசுகையில், சமூகத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் பின் தங்கிய நிலையிலுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு மனித சக்தி மூலம், தொண்டு, சேவை, என்பன மூலம் உதவுவதே ஆரம்ப சுகாதார பாதுகாப்பு ஆகும். இந் நிலையத் தொண்டர்கள் கிராமமட்டத்திலுள்ள வீடுகள் தோறும் சென்று, தொற்று நோய்த் தடுப்பு, புற்றுநோய் பற்றிய சல ரோகம் பற்றிய விபரங்களை அறிந்து, அவர்களுக்கு ஏற்ற காலங்களில் வைத்திய சாலைக்கு அனுப்பி வைப்பதோடு, ஏழைக் குழந்தைகள்—தாய்-சேய் விடயத்தில் பாரிய சேவை செய்ய வேண்டும். சுகாதாரப் பாதுகாப்பு – சத்துணவு பற்றிய போதனைகளைச் செய்ய வேண்டும். அன்பு கருணை தொண்டு மனப்பான்மையுடன் சேவை செய்ய வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டார்,

## இ. மு. போ. எ. ச. கருத்தரங்கில் பேச்சு;

# மனிதாபிமான உணர்வை கிளரச் செய்யும் எழுத்து சமுதாயத்தை வழிப்படுத்தும்!

(கொழும்பு)

"அறிவுப் பாதையில் நாட்டு மக்களை இட்டுச்செல்லும் பணி எந்தவொருநாட்டிலும்அறிஞர் குழாத்தை சார்ந்ததொன்று இதே போல் மனிதாபிமான உணர்வுகளை கிளரச் செய்யும் எழுத்துக்களால் சமுதாயத்தை வழிப்படுத்தும்பணி எழுத்தாளனைச் சாந்தது."

இவ்வாறு சமீபத்தில் கொழும்பு முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்கில் உரையாற்றிய 'வீரகேசரி'யின் பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச்செல்வன் குறிப்பிட்டார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கொழும்பில் நடத்திய மேற்படி கருத்தரங்கிற்கு எழுத்தாளர் காவலூர் இராசதுரை தலைமை வகித்தார்.

'சமுதாய மாற்றக் கால கட்டத்தில் எழுத்தாளர் பணி' என்னும் தலைப்பில் உரையாற்றிய திரு. சிவநேசச் செல்வன் மேலும் பேசுகையில்.

'வரலாறு ஒரு சமூக விஞ்ஞானம் அதற்குத்துணை நிற்பது விஞ்ஞான ரீதியிலான ஆய்வும் இலக்கியமும் கலைகளுமாகும். எந்தவொரு நாட்டின் வரலாறும் இலக்கியமும் அந்த நாட்டின் ஏற்றத்தையும் வீழ்ச்சியையும் காட்டுவதாக அமையும் என்ற உண்மையை மறந்து விடக்கூடாது.'

'இலக்கியத்தின் மூலம் மறுமலர்ச்சி புத்தெழுச்சி எனக் கூறினல் பழமையைப்போற்றுவதும் புதுமையை இணைத்து நோக்குவதும் அவசியமானது, புதுப்பிப்பது மட்டும் மறுமலர்ச்சியாகாது அதுவே, மறுமலர்ச்யின் துவக்கமாக அமையலாம்.'

'தான் வாழும் சூழலை நேசிக்காதவன் உண்மையான எழுத்தாளனாக இருக்க முடியாது. மக்களின் மனச்சாட்சியின் குரலாக ஒலிப்பவன் எழுத்தாளன்?'

பல எழுத்தாளர்கள் சமூகமளித்திருந்த மேற்படி கருத்தரங்கில் திருமதி அன்னலட்சுமி இராசதுரை, திரு. மரியதாஸ் போன்ரோரும் உரையாற்றினார்கள்.

# சிறந்த சாரணர் நாட்டுக்கும் சமூகத்திற்கும் சிறந்த வழிகாட்டிகளாவர்

(நல்லூர்)

"சாரணர்கள் எப்பொழுதும் பிறருக்குதவும் மனப்பாங்குடையவர்கள். சிறந்த சாரணர்கள் சமூகத்திற்கும், நாட்டிற்கும் சிறந்தவழிகாட்டிகளாவர். சாரண இயக்கத்தின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் சாரணர் சிறந்த சேவை மனப்பான்மை கொண்டவனுக வாழ்வான்."

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி உப அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் கல்லூரியின் உவில்லியம்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரியின் சாரணத் துருப்புகளின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்புட்டார்.

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற வருடாந்த பாசறையில் இரண்டாவது இடத்தைச் சுவீகரித்துக் கொண்ட சாரணர் குழுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு தேநீர் உபசரணைக் கூட்டத்தில் உப அதிபர் தொடர்ந்து பேசுகையில், எமது கல்லூரியில் செயற்படும் சாரணர்குழுபலவகைகளில்கல்லூரிக்கு உதவிவருகிறதென்றும், சாரணர்குழுவின் வளர்ச்சிக்கு கல்லூரி வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சாரணர் துருப்பின் தலைவர் செல்வன் மார்க் ரஞ்சன் அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் சாரணர் குழுப் பொறுப்பாசிரியர்களான திருவாளர்கள் எஸ். சந்திரமௌலிசன், பி. சிறீகரன் ஆகியோர் பேசினர்கள். சாரணர் குழுப் பொருளாளர் செல்வன் அன்ரன் சூசைதாசன் நன்றி தெரிவித்துப் பேசினர்.

## கலாநிதி மோகனதாஸ் தகவல்:

# குடாநாட்டில் இவ்வருடம் ஐந்து லட்சம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன

(கொடிகாமம்)

இலங்கையில் தென்னை, இறப்பர், தேயிலை போன்றவற்றிற்கெல்லாம் ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. ஆனல் பனையை பற்றி ஆராய்ச்சி செய்வதற்கென்று ஒரு நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை. தற்பொழுது பனம் பொருள் அபிவிருத்தி சபை எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றைஇங்கு நிறுவுவதற்கு அரசு அங்கீகாரமளித்துள்ளது.

இருபத்தி ஐந்து லட்சம்ரூபா செலவில்கைதடியில் இந்த நிலையத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது இந்நிலையத்திற்கான அமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்."

இவ்வாறு கைதடி வெளிக்கள நிலையத்தில் பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் நடைபெற்ற முழு நாள் கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-பனையை நல்ல முறையில் பயன்படுத்தினல் தென்னையிலிருந்து கிடைக்கும் வருமானத்தை விட அதிகளவுவருமானத்தைப் பெறலாம் பனம் பொருள் அபிவிருத்திச் சபை தற்பொழுது பனம் பழம் ஒன்றை நாற்பது சதமாகவும், பனம் விதை ஒன்றை பன்னிரெண்டு சதமாகவும் கொள்வனவு செய்கின்றது. பனையை விருத்தி செய்யும் நோக்குடன் இவ்வருடம் ஐந்து லட்சம் பனம் விதைகள் குடாநாடெங்கினும் நாட்டப்பட்டுள்ளன. இதே தொகை விதைகளை அடுத்த வருடமும் நாட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்ருர்.

கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய உசன் இராமநாதன் கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் தனதுரையில், "தமிழ் நாட்டில் காரைக்காலில் வயல் வரம்புகளில் பனை மரங்களை உண்டாக்கியிருக்கின்ருர்கள் இப்படிச் செய்வதன் மூலம் வரம்புகள் நீரினல் அழிக்கப்படுவதை தடுப்பதோடு பனையையும் விருத்தி செய்து கொள்ள முடிகின்றது. இதே முறையை இங்கும் அறிமுகப்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

தென்மராட்சிப் பகுதி மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் வெளிக்கள ஆய்வ நிலைய பொறுப்பாளர் எஸ். சுப்பையா, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், எஸ். சிவகணேசன், கோ. கோகுலநாதன் ஆகியோரும் கருத்துரை நிகழ்த்தினர்

### வாகன தகுதிகாண் சான்றிதழ்கள் வழங்குவதற்கான வாகனங்கள் பழுது பார்க்கும் கராஜ்களுக்கு அனுமதி வழங்குதல்

மேற்குறிப்பிட்ட காரணத்திற்காக வாகனம் பழுது பார்க்கும் கராஜ் சொந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவை பின்வரும் தகைமைகளையும் கருவிகளையும் உள் கொண்டிருக்க வேண்டும்.

1. வாகனங்களின் கீழ்ப்பாகத்தை பரிசோதிப்பதற்கு ஏற்ற வகையில் கிடங்கு அல்லது மேடை ஒன்று அமைத்திருத்தல் வேண்டும்.
2. பிறேக்கை பரிசோதிக்கும் கருவிகள் இருத்தல் வேண்டும்
3. முன் வெளிச்சங்களை பரிசோதிக்கும் கருவிகள் இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு வேண்டிய சகல கருவிகளும் ஆயுதங்களும் இருத்தல் வேண்டும்.

வாகன தகுதிகாண் சான்றிதழ் விநியோகிப்பதற்கு குறைந்தது கனிஷ்ட தொழில் நுட்ப பரீட்சையிலாவது (J. T. O.) சித்தியடைந்துள்ள ஒருவரை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வேலைக்கு அமர்த்தியிருக்க வேண்டும்.

இப்படியான வாகன தகுதிகாண் சான்றிதழ்களை விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கராஜ் ஒன்று அதற்குரிய கட்டணமாக ரூபா 300/- வரைக்குள் அறவிட அனுமதிக்கப்படுவர்

மேற்குறிப்பிட்டதற்கான விண்ணப்பங்கள் யாவும் கிளிநொச்சி கச்சேரியிலுள்ள அரசாங்க அதிபர் அவர்களுக்கு 85. 11. 25 ம் திகதியன்ரே அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

என். ஐயநாதன்
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி
கிளிநொச்சி.
05, 11. 1985.

# பருத்தித்துறையில் நடந்த ஒரு முக்கிய சம்பவம் இது

(புலோலி)

கூலிக்கு அமர்த்தியிருந்த கூலியாள் தனது வேலைக்கான கூலியைக் கேட்டபோது அறையொன்றினுள்பூட்டி வைத்து கொடூரமாகத் தாக்கிய முதலாளி பொதுமக்களினல் எச்சரிகை செய்யப்பட்டதுடன் கூலியாளுக்கு தான் செய்த குற்றத்திற்காக 5,000 ரூபா பணத்தையும் செலுத்தினர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளதாவது, அராலியைச் சேர்ந்த க. கருணாகரன் என்பவரை பருத்தித்துறையைச் சேர்ந்த பௌசர் முதலாளியொருவர் கூலிக்கு அமர்த்தியிருந்தார் வேலை செய்த கூலியாள் தனது வேலைக்கான கூலியைக் கேட்டபோது முதலாளி அறையொன்றுக்குள் பூட்டிவைத்து கொடூரமாகத் தாக்கியபின்தனதுவாகனத்தில் ஏற்றிச் சென்று இடை வழியில் இறக்கிவிட்டாராம்.

பாதிப்படைந்த கூலியாளின் பரிதாப நிலையையுணர்ந்த பொது மக்கள் ஒன்று திரண்டு முதலாளியிடம் சென்று நியாயம் கோரினர். பொது மக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாத முதலாளி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன் கூலியாளுக்கு 5,000 ரூபா வழங்க ஒத்துக் கொண்டார். அத்துடன் பொது மக்கள் சாட்சியாக எழுதப்பட்டு முத்திரையில் கையொப்பமிட்டு கூலியாளிடம் ஒப்படைத்த கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கருணாகரன் ஆகிய தொழிலாளியை தான் செய்த வேலைக்குரிய கூலியைக் கேட்டதன் காரணத்தினல் மிகவும் கொடூரமான முறையில் தாக்கியது உண்மையென மக்கள் மத்தியில் ஒத்துக் கொள்கிறேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இக் குற்றத்தை நான் ஒப்புக்கொண்ட காரணத்தினல் அவருக்கு பணமாக 5,000 ரூபாவை கையளிக்கின்றேன். இனிமேல் இதைப்போன்ற செயலை எந்தத் தொழிலாளிக்கும் செய்ய மாட்டேன் என்பதை மக்களாகிய உங்களுக்கு அறியத் தருகின்றேன்."

## ஆங்கில தின போட்டியில் சாதனை

கச்சாய் அரசினர் வித்தியாலயம் இவ்வாண்டுக்கான சாவகச்சேரி கல்வி வட்டார ஆங்கிலதினப் போட்டியில் மகத்தான சாதனையை நிலைநாட்டியுள்ளது. முதலாம் பிரிவில் மூன்று இடங்களையும், இரண்டாம் பிரிவில் இரண்டு இடங்களையும், மூன்ரும் பிரிவில் மூன்று இடங்களையும் பெற்றுள்ளது. அத்துடன் மூன்ரும் வகுப்புக்கான நாடகப் போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

## மணிவிழா

(குருநகர்)

வட்டுக்கோட்டை, திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் 60வது ஆண்டு நிறைவு விழா அடுத்த ஆண்டின் முற்பகுதியில் கொண்டாடப்பட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மணிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. மேற்படி மலர் கல்விமான்களின் கருத்துரைகளையும் தாங்கி வரும்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

உதய சிந்தனை

அன்பிலாச் சுய நலமிகள் எல்லாப் பொருளையும் தமக்கெனவே வைத்திருப்பர்; அன்புள்ளத்தர் தமது எலும்பையும் பிறர்க்கே அளிப்பர்.
- திருக்குறள்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

# இதய ஒலி

9–11–85 சனிக்கிழமை (குரோதன - ஐப்பசி 24)

## ஆண்டு இரண்டானாலும் பல்லவி பழையது தான்

இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும், தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையில், மறைந்த பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைப் படலம் இம் மாதத்துடன் இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது

1983 நவம்பரில் சர்வகட்சி மாநாட்டின் முதற் கட்டம் ஆரம்பமானது.

ஒரு புறத்தே பேச்சுவார்த்தையும், மறு புறத்தே சண்டித்தனமுமாக சர்வகட்சி மாநாடு ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடி எந்த முடிவும் காணாமலே முற்றுப் பெற்றது.

மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும்–சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட-ஏமாற்றத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட நிலையிலேயே முடிவு காணாது முடிந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

அதன் பின்னர் டில்லிப் பேச்சுக்கள், திம்புப் பேச்சுக்கள் என்று ஊர்ந்தும், நகர்ந்தும் சென்று, மீண்டும் டில்லியில் வந்து நிற்கின்றது

"பார்த்தசாரதியா, பண்டாரியா நம்ம ஆள்" என்ற பிரச்சினை, இனப்பிரச்சினைத் தீர்வை விடப் பெரும் பிரச்சினையாக இலங்கை அரசுக்குத் தோன்றியது.

"இந்திரா காந்தி மறைந்தார்; ராஜீவ் காந்தி வந்தார்." "பார்த்தசாரதி போனார்; பண்டாரி வந்தார்".

ஆனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஏதாவது முன்னேற்ற நிலை ஏற்பட்டதா என்று பார்த்தால் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

சாண் ஏறியது போலத் தென்பட்ட வேளையிலெல்லாம், முழம் சறுக்கியது தான் மிச்சம்.

இந்த இரண்டு வருடகாலத்துக்குள் அக்கினி காண்டம், உயிர்வதை படலம், சித்திரவதை காண்டம், கொள்ளையடி படலம் என்று பல கட்டங்களைத் தாண்டி, இருந்ததையும் கூட இழந்த நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களின் எல்லை நகரங்களான மன்னார், வவுனியா, திருமலை ஆகிய இடங்களிலிருந்து பல லட்சக் கணக்கான தமிழ் மக்கள் பயமுறுத்தலால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டு, சடலங்களே அடையாளம் காணப்படாத வகையில் எரித்துச் சாம்பராக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான அராஜக அட்டூழியங்கள் போதாதென்று, தமிழரின் தாயகத்தையே சூறையாடுவதற்கும் இப்போது பகிரங்கமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்று ஒன்றே இல்லையென்று ஆட்சியாளர்கள் அடித்துக் கூற முனைப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து மன்னார், யாழ்ப்பாணம், வன்னி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை ஊடாக கதிர்காமம் வரையான பகுதியே தமிழர் பிரதேசமாக ஒரு காலத்தில் இருந்தது என்பதற்குச் சரித்திரம் சான்றுபகரும்.

இன்று அதனைத் தமிழ் மக்கள் கேட்கவில்லை.

வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் சேர்ந்த பகுதியையே தமிழரின் பாரம்பரியப் பிரதேசமாக இன்று தமிழ் மக்கள் கொண்டுள்ளார்கள்.

"நீங்களும் வாழுங்கள்; எங்களையும் வாழவிடுங்கள்" என்று தான் தமிழ் மக்கள் கேட்டு வருகின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கு இடமில்லை என்ற பழைய பல்லவியையே வாசித்துக் கொண்டிருக்கின்றது.

'இணைப்பு' என்ற புதுப் பேச்சு எதற்காக? இரண்டும் இணைந்ததுதானே தமிழர் தாயகம்.

இங்கு எதனையும் புதிதாக இணைக்க வேண்டியது அவசியமில்லை. இரண்டும் இணைந்த அமைப்பே தமிழர் தாயகமென்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

எனவே பழைய பல்லவியை விட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற சிந்தனையுடன் அரசு செயற்பட வேண்டியது அவசியம்.

இலவு காத்த கிளியின் நிலை ஏற்படக்கூடாது!

உணவு போஷாக்கு வார சிறப்புக் கட்டுரை

## செயற்கை பசளைப் பாவனை மனித ஆயுளைக் குறைக்கிறது

என். கதிர்காமநாதன்
அமெரிக்க சவுத் வெஸ்ட் பல்கலைக்கழக
கலாநிதி ஆராய்ச்சியாளர்

உணவில் புரத சத்து அதிக அளவில் சேர்க்கப் பட வேண்டும். நமது கிராமங்களில் வாழும் வறிய மக்களிடம் புரதப் பற்றுக் குறைபாடு அதிக அளவில் உள்ளது. போஷாக்கு உணவுகளை உண்ணும் போது ஆரோக்கியமானவர்களாக வாழமுடியும். புரதச்சத்தைப் பெறுவதற்காக கிராமங்கள் தோறும் ஆடு, கோழி, மாடு என்பவற்றை வளர்க்கவேண்டும். இன்று கால் நடைகளை மக்கள் வளர்ப்பது குறைவாகவே உள்ளது, வீட்டுத் தோட்ட மூலமும், கால் நடைகளின் மூலமும் பெறப்படும் உணவுகளை நாம் உட்கொண்டு வந்தால் வைத்தியரிடம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.

இன்று விவசாயத்தை செய்யும் நம் மக்கள் இயற்கைப் பசளைகளைப் பாவிப்பது மிகவும் குறைவு. செயற்கைப் பசளைகளையும் நச்சு மருந்து வகைகளையும் பயிர்களுக்குப் ப வித்துவரும் போது அதனை உட்கொள்ளும் மனிதருக்கு சிறிது சிறிதாக நாளடைவில் நச்சுத்தன்மை சேர்ந்து அவனது ஆயுளையும் குறைக்கின்றது இயற்கைப் பசளைகளை பாவித்து விவசாய முயற்சிகளை மேற்கொண்டால் போஷாக்கான உணவுகளை நாம் பெறுவதுடன் எமது ஆயுளையும் நீடித்துக் கொள்ள முடியும்.

கால் நடை வளர்ப்பும், கிராமிய விவசாயமும் செயலற்றுப் போன காரணத்தினால் கிராமிய பொருளாதாரமும் பாதிப்படையக் கூடியதாக உள்ளது. மக்கள் அதிக அளவில் காபோவைதறேற் உள்ள மாப் பொருட்களையும் சீனியையும் உட்கொண்டு வருவதனால் உடம்பு உப்பி டயபிற்றீஸ் என்னும் சலரோக நோய்க்கும் ஆளாக நேரிடுகின்றது.

பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் அதிக அளவு இரத்தம் போவதனால் இரும்புச் சத்து, மற்றும் சத்துக்கள் இழக்கப்படுகின்றது. இப்பெண்களுக்கு இக்காலங்களில் போஷாக்கான உணவு வகைகள் கொடுக்கப்படவேண்டியுள்ளது. தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்களுக்கும் அதிக அளவில் போஷாக்குணவுகள் வழங்கப்படவேண்டும். ஏனெனில் தாய்ப்பால் மூலம் அவளுக்குச்சேர வேண்டிய சத்துக்கள் யாவும் குழந்தைக்கு சென்று விடுவதேயாகும்.

நமது சமுதாயத்தில் பெண்கள் உணவு விடயத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள். ஆண்கள் தாங்கள் மட்டும் திருப்தியாக உண்டால் போதுமானது என நினைக்கின்றார்கள். பெண்கள் சாப்பிடுவதைப்பற்றி அக்கறையேதும் கொள்வதில்லை.

பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும் போது தேவையான சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாத காரணத்தினால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பலவீனமானவர்களாகவும், நரம்பு மண்டலம், மூளை என்பன பாதிக்கப்பட்டு மனோ வளர்ச்சி குன்றிய குழந்தைகளாகவும் நோய் எதிர்ப்பு சக்தியற்ற குழந்தைகளாகவும் வாழ வேண்டியுள்ளது. இக் குழந்தைகளினால் சமுதாயத்திற்கு ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

நாகரிக வளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ச்சியடைய மக்களும் திட்ட வட்டமான போஷாக்கு உணவுகளை எடுக்காததனால் அவர்களுக்கும் போஷாக்கின்மை ஏற்படுகின்றது. உணவு, பழக்க வழக்கம் இன்று ஒரு நாகரிகமான செயலாக மாறி வருகின்றது.

முன்னேற்ற மடைந்த நாடுகளில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், மற்றும் உயர் கல்வி நிலையங்களிலும் இப்போது உணவு போஷாக்கு சம்பந்தமான பாடங்கள் நடைபெற்றுவருகின்றன. எமது நாட்டிலுள்ள பாடசாலைகளிலும், பல்கலைக் கழகத்திலும் உணவு விஞ்ஞானம் ஒரு பாடமாக புகுத்தப்படல் அவசியம்.

உணவு போஷாக்கைச் சரிவரக் கடைப் பிடித்து வந்தால் 140– தொடக்கம் 160 வயது வரை வாழலாமென அமெரிக்க உயிரியல் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பிறை (Dr fry) ஆராய்ச்சி மூலம் கண்டறிந்துள்ளார். எனவே நாமும் கிராமிய வட்டத்தில் உணவு போஷாக்கை திட்ட வட்டமாக கடைப்பிடித்து வந்தால் திடகாத்திரமானவர்களாகவும், நோயற்றவர்களாகவும், பொருளாதார வசதி படைத்தவர்களாகவும் வாழ்வது உறுதி.

### திங்கட்கிழமை கரோல் ஆராதனை

(நல்லூர்)

வடபிரதேச கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் கல்வி கற்கும் கிறிஸ்தவ பிள்ளைகள் கலந்து கொள்ளும் 'கரோல்' ஆராதனை யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை 11ம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை கரோல் ஆராதனைக் குழுவினர் செய்துள்ளனர்.

### 11-ம் திகதி பரீட்சை

(நல்லூர்)

இலங்கைகிறிஸ்தவ ஆசிரிய சங்க ஒன்றியத்தின் வடபிரதேசக்கிளையினால் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் றோமன் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ பாடத்தைக் கற்கும் மாணவ—மாணவிகளுக்கான முதன்மைப் பரீட்சைஇம் மாதம் 11ந் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி வட்டுக்கோட்டை, உடுவில், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலை மண்டபங்களில் இப்பரீட்சை நடைபெறவிருக்கிறது. பரீட்சைககான ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் திரு. டி பொன்னையாவின் தலைமையிலான பரீட்சைக்குழு செய்துள்ளது.

### விசர் நாய்க்கு மூவர் பலி

கடந்த இரண்டு மாதத்தில் விசர்நாய்க் கடியினால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூவர் மரணமாகியுள்ளனர். உடனடியாக சிகிச்சை பெறத்தவறியமையே இதற்குக் காரணமென வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மின்சார விநியோகம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதிவழியாக கற்சிலை மடுவு வரைக்கும் மாங்குளம் வீதிவழியாக சிவன் கோவில் சந்தியிலிருந்து கங்கு வாரி வரைக்கும் மின்சாரம் வழங்குவதற்கென மின்சார இலாகாவினால் கம்பங்கள் போடுவதற்கென ஆயத்த வேலைகள் நடைபெறவிருக்கிறது. இதற்கென மின்சாரக் கம்பங்கள் வீதிவழியே கொண்டுவந்து போடப்பட்டுள்ளன. இதனால் முன்னூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சார ஒளி பெற இருக்கின்றன. பல காலமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ்வேலை இப்போது மின்சார இலாகாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

### குட்டி முதலை பிடிபட்டது

அச்சுவேலி சங்கானை வீதியில் தென்மூலை என்ற இடத்திலுள்ள கிணற்றுள் சுமார் மூன்று அடி நீளமான குட்டி முதலையொன்று நேற்று உயிருடன் பிடிக்கப்பட்டது.

மழைக்காலமானதால் இந்த முதலை வெள்ளத்துடன் சேர்ந்து இங்கு வந்ததாக தெரிகிறது. பலர் இதனைப் பார்வையிட்டு வருகின்றனர்.

★ 'எம். 19' இடதுசாரிக் கெரில்லாக்களால் பணயக் கைதிகளாக்கப்பட்டிருந்த

# கொலம்பிய தலைமை நீதிபதி படுகொலை

## நீதிமன்றக் கட்டடம் மீட்பு!

(போபட்டா)

கொலம்பியத் தலைநகரான போபட்டாவில் எம். 19 என்ற இடதுசாரிக் கெரில்லாக்களால் கைப்பற்றப்பட்டிருந்த சுப்ரீம் கோர்ட் கட்டடத்தை அரச படைவீரர்கள் மீட்டுள்ளனர் என நேற்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் மேற்படி கெரில்லாக்களால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தலைமை நீதிபதி அல்போன்ஸோ நியாஸ் உட்பட மூன்று நீதிபதிகளும் கெரில்லாக்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

கடந்த புதன் கிழமையன்று பிரஸ்தாப இடதுசாரிக் கெரில்லாக்கள் சுப்ரீம் கோர்ட் கட்டடத்தைக் கைப்பற்றியதுடன் மேற்படி நீதிபதிகளையும் பணயக் கைதிகளாக்கினர்.

அரசபடை வீரர்கள் பிரஸ்தாப கெரில்லாக்களுடன் கடுஞ் சமரிட்டு இருபத்தெட்டு மணித்தியாலங்களின் பின் குறிப்பிட்ட கட்டடத்தை தம் வசமாக்கினர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இக்கடுஞ்சமரின் போது ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இவர்களில் கெரில்லாக்களும் அடங்குவர்.

பலவந்தமாக மேற்படிக் கட்டடத்தைக் கைப்பற்றியிருந்த கெரில்லாக்கள் அரசிடம் பல கோரிக்கைகளையும் விடுத்திருந்தனர்.

ஆயினும் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தான் தயாராக இல்லை என்று அரசு அறிவித்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

கொலம்பியா தென் அமெரிக்க நாடென்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழகம் புதுவையில் பெருமழை

(சென்னை)

தமிழகத்திலும் புதுச்சேரியிலும் பெரும் மழை காரணமாகப் பலர் வீடிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுச்சேரியில் மட்டும் அறுநூறு குடும்பங்கள் வீடிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

### கனிஷ்கா விமான விபத்து கனடாவில் நால்வர் கைது!

(ஒட்டாவா)

சுமார் ஐநூறு பேரைப் பலி கொண்ட பாரத கனிஷ்கா விமான விபத்துத் தொடர்பாக கனடாப் பொலிசார் நால்வரைக் கைது செய்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விமான விபத்து பெரும் மர்மம் சூழ்ந்ததாகவும் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியதாகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜெர்மன் ஜனநாயக குடியரசு பாரத உறவுகள் வலுவுறும்

(பெர்லின்)

பாரதமும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் பரஸ்பரம் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ளவுள்ளன.

தற்போது இங்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாரதத் துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு துணை ஜனாதிபதி திரு கிறன்ஸ் விருந்துபசாரம் ஒன்றினையும் அளித்துக் கௌரவித்தார்.

இரு நாடுகளும் பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் பன்முகத் தொடர்புகளை மேலும் வலுவாக்க இணங்கியுள்ளன என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வருடத்தில் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பெற்றோர் கடமை

(புதுடில்லி)

"குழந்தைகளுக்கு ஏற்ற சூழ்நிலையைப் பெற்றோர் உருவாக்க வேண்டும்," என்று பாரதஜனாதிபதி திரு. ஜெயில் சிங் வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

### ரூ. 20 லட்சம் செலவில் ஆய்வுகூடம்

(மதுரை)

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் மரபியல் தொழில் நுட்ப ஆய்வு கூடம் ஒன்று இருபது இலட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளதாக மேற்படிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில் எதியோப்பிய அமைச்சர்

(சென்னை)

எதியோப்பியப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அகமத் தற்போது தமிழகம் விஜயம் செய்துள்ளார். சென்னையிலுள்ள இணைப்பு ரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையையும் அவர் சென்று பார்வையிட்டார்.

தலைவர் கொர்பசெவ் மீண்டும் உறுதி

## ஆயுதப் போட்டித் தடுப்புக்கு ரஷ்யா தயாராகவே உள்ளது!

(மாஸ்கோ)

"ஆயுதப் போட்டாபோட்டியைத் தடுப்பதற்கும், உற்பத்தியைக் குறைப்பதற்கும் சோவியத் யூனியன் தயாராக உள்ளது" என்று சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

இம்மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள அணுவாயுதக் குறைப்புத்தொடர்பான உச்சிமாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதிதிரு. ரொனல்ட் ரீகனுடன் திரு. கொர்பசெவ் பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக விவாதிப்பாரென்று 'கிரெம்ளின்' வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீபத்தில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸ் மேற் கொண்ட சோவியத் விஜயமும் திரு. கொர்பசெவ் வுடனான பேச்சுவார்த்தையும் ஆக்கபூர்வமான நிலையைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது சோவியத் விஜயம் இருவல்லரசுகளுக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகளை ஓரளவு குறைக்க உதவியது என்று திரு. சூல்ட்ஸ் கருத்து வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### 3 புதிய நீதிபதிகள்

(சென்னை)

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு இன்று புதிய நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளனர்,

திருவாளர்கள் பாஸ்கரன், ராமலிங்கம், பெல்லி ஆகியோரே மேற்படி புதிய நீதிபதிகளாவர்.

### வழக்கு தாக்கல்

(ஒட்டாவா)

பாரத கனிஷ்கா விமான விபத்துச் சம்பவம் தொடர்பாக இரு சீக்கியருக்கு எதிராக கனடா பொலிசார் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**மாணவர் வதிவிடங்கள் பதிவு செய்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு (திருநெல்வேலி) ஐந்து மைல் சுற்றுடலில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் இப்பல்கலைக்கழக மாணவர்களுக்கு வதிவிட வசதியை அளிக்க விரும்பின் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 1985-11-30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை முத்திரையொட்டிய அஞ்சலுறையில் (9" × 4") முகவரியிட்டு அனுப்பி வைப்பதன் மூலமோ நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

உணவு, தளபாட வசதிகளை அளிக்கும் விடுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
7-11-1985

அமெரிக்க ஜனாதிபதி சொல்கிறார்:

## ஜெனீவா மாநாடு: சமாதானம் மலர வெற்றி பெற வேண்டும்

(வாஷிங்டன்)

"இம்மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா உச்சிமாநாடு சுமுகமாக நிகழும்" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் ரீகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"உலக சமாதானத்துக்காக இம்மாநாடு வெற்றிபெற வேண்டும்" என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.



திரு. ரீகனின் இச்சமாதான ஆவலை உரைவடிவில் பத்து நிமிடம் வொய்ஸ் ஒப் அமெரிக்கா இன்று ஒலிபரப்பவுள்ளது. சோவியத் மொழிபெயர்ப்பில் இது ஒலிபரப்பப்படும். இவ்வொலிபரப்பை சோவியத் யூனியன் தடைசெய்து வருகிறது. இவ்வுரை இடம் பெறும்போது ஒலிபரப்பைத் தடைசெய்ய வேண்டாமென சோவியத்யூனியனை வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டுள்ளார், தன் உரையை சோவியத் மக்கள் கேட்க வேண்டுமென திரு. ரீகன் விருப்பம் வெளியிட்டுள்ளார்.

இம்மாநாடு இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மாவையில் திருச்செந்தூர் புராணபடனம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இவ்வாண்டும் ஸ்கந்தஷஷ்டி விழாவில் "திருச்செந்தூர்ப் புராணபடனம் இடம்பெறவுள்ளது.

மாவை.கந்தன் ஆதீன முதல்வர் சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களின் அழைப்பின் பேரில் இசையரசு சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பியும், தென்மராட்சி பக்திநெறிக் கழகச் செயலர் கு. வி. மகாலிங்கமும் புராண பயனை விரிவுரை செய்யவுள்ளனர்!

### பரீட்சைகள் 18-ல் ஆரம்பம்

(கொடிகாமம்)

யாழ். கல்வித் திணைக்கள பரீட்சை சபையால் நடாத்தப்படும் ஆண்டிறுதிப் பரீட்சைகள் இம்மாதம் பதினெட்டாம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆண்டு பதினொன்றுக்கான பரீட்சைகள் நவம்பர் பதினெட்டாம் திகதி ஆரம்பமாகி இருபத்து இரண்டாம் திகதி முடிவுறும். ஆண்டு ஏழு முதல் ஆண்டு பத்து வரையிலான வகுப்புகளுக்குரிய பரீட்சைகள் நவம்பர் இருபத்து ஆறும் திகதி ஆரம்பமாகி டிசம்பர் மூன்றும் திகதி முடிவுறும்.

மேற்படி பரீட்சைக்குரிய நேரசூசிகைகள் பரீட்சை சபையால் பாடசாலைகளுக்கு தற்பொழுது அனுப்பப்பட்டு வருகின்றது.

### உங்களுடையதா?

காரைநகர் களபூமி பொன்னாவளையைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கரத்தினம் என்பவரால் யாழ் - ஸ்ரான்லி வீதியில் என்வலப்புடன் சிறுதொகை பணம் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் பூரண அத்தாட்சிப்படுத்தி ஈழமுரசு காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஈழமுரசு

## அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் இலங்கையில் தரித்துச் செல்லும்!

அமெரிக்காவின் 'கிற்றகோட்' என்ற விமானந்தாங்கிக் கப்பல் இம்மாதம் 10ம் திகதிக்கும் 14ம் திகதிக்கும் இடையில் இலங்கையில் தரித்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் தெரிவித்துள்ளார். அணுவாயுதக் கப்பல்களை இலங்கைக்குள் அனுமதிப்பதில்லை என்ற இலங்கையின் கொள்கையில் மாற்றம் எதுவும் இருக்காது எனவும் ஜனாப் ஹமீத் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

சரமாரியாக துப்பாக்கிவேட்டுகள் தீர்க்கப்பட்டன

# கடற்படையிடம் கடலில் சிக்கி தப்பிப்பிழைத்த

# குருநகர் மீனவர் அனுபவம்

[குருநகர் நிருபர் த. பரமலிங்கம்]

இம் மாதம் 2ம் திகதி குருநகரைச் சேர்ந்த இருபத்திரெண்டு மீனவத் தொழிலாளர்கள் பாலாவி என்னும் இடத்தில் இருந்து சிறிய வள்ளம் ஒன்றில் குருநகரை நோக்கி தொழிற் செய்து வந்து கொண்டிருக்கையில் கடற்படை வீரர்களின் சரமாரியான துப்பாக்கி வேட்டுகளுக்கு மத்தியில் மயிரிழையில் உயிர் தப்பி வந்து சேர்ந்த அனுபவத்தை அதே வள்ளத்தில் பிரயாணம் செய்த இளைஞர் ச. இமமனுவல் (செட்டி) என்னிடத்தில் விபரித்தார்.

இருபத்திரெண்டு தொழிலாளர்களும் வழக்கமாக பிரயாணம் செய்யும் பெரிய இயந்திரப் படகு பழுதடைந்து விட்டதால், சிறிய 'அவுட்மோட்டர்' பொருத்திய வள்ளமொன்றை இரவல் பெற்று அத்தனை தொழிலாளர்களும் நெருக்கமாக ஏறி வருவதை பாலைதீவுக்கு அண்மையாக வந்து கொண்டிருந்த கடற்படையின் ரோந்துப் படகு கண்டு, வரும்படி சைகை செய்ததால் வள்ளம் அவர்களை நோக்கி செல்வதற்குத் திருப்பப்பட்டது.

வள்ளம் திருப்பப்பட்ட வேகத்தில் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் கடல் நீரில் வீழ்ந்து சீறின. எங்களுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. வயதானவர்களான விக்டர், செபஸ்தியன், சிலுவை ஆகிய மூவரையும் தவிர பத்தொன்பது பேர்களும் கடலில் பாய்ந்து நீந்திக் கரையை வர முயற்சி செய்தோம் என்று அவர் தெரிவித்தார்.

திரும்பவும் ரோந்துப் படகில் இருந்தவர்களின் கடும் எச்சரிக்கை அழைப்பின் வற்புறுத்தலால் வள்ளத்தில் ஏறி ரோந்துப் படகை நோக்கிச் செல்கையில் படகில் பொருத்தி இருந்த பீரங்கியை மூடி வைத்திருந்த மேலாடையை நீக்குவதைப் பார்த்து இனித் தப்பமாட்டோம் என்ற முடிவுக்கே வந்துவிட்டோம்.

ரோந்துப் படகை அண்மித்து எமது சார்பாக கதைப்பதற்கு எங்களுள் படித்த வாலிபனை மைக்கலைத்தெரிவு செய்து அவர்களது படகுக்கு அனுப்பினோம்.

ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மைக்கலுடன் விசாரணையை வைத்துக் கொண்ட பிற்பாடு விக்டர் என்னும் வயோதிப மீனவரை அழைத்து மைக்கலிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சொன்ன பதில்கள் உண்மையானவையா என்பதைப் புரிந்து கொண்ட பின்னர் 'பயங்கரவாதிகள் கடற் தொழிலாளர் போலவும் உலவி வருகிறார்கள்' என்பதைத் தெரிவித்து எங்களை செல்வதற்கு அனுமதித்தார்கள்.

காலை பத்து மணிக்குள்ளாக குருநகர் வாடியை அடைந்து மீன்களைச் சந்தைப் படுத்தும நாங்கள் அன்றைய தினம் மாலை நான்கு மணிக்கே 'தப்பினோம் பிழைத்தோ'மென வந்து சேர்ந்தோம் என்று இளைஞர் இம்மனுவல் தெரிவித்தார்.

ஈழ மாணவர் பொதுமன்ற முயற்சியால்

## தேவரிக்குள வாய்க்கால் வெட்டி திறந்துவிடப்பட்டது

கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழைகாரணமாக வெள்ளப் பெருக்கெடுத்து அருகேயுள்ள வீடுகளிலிருந்து மக்கள் குடிபெயரும் நிலையிலிருந்த யாழ் மடம் வீதிக்கு அருகேயுள்ள தேவரிக் குளத்திற்கு, ஈழ மாணவர் பொது மன்றத்தினர் உரிய நேரத்தில் சிரமதான அடிப்படையில் பிரதான வடிகாலை வெட்டித் திறந்து வெள்ளத்தை வெளியேற்றி இப்பகுதி மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ளார்கள்

வருடா வருடம் பெய்யும் மழை காரணமாக இக் குளம் நிரம்பி வழிவதால் இப்பகுதி வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு மக்கள் குடிபெயர்வது வழக்கமாகவே இருந்து வருகின்றது.

இந்த அவல நிலையைக் கண்ணுற்ற ஈழ மாணவர் பொது மன்றத்தினர், யாழ். மாநகர சபை ஆணையாளர், மராமத்துப் பொறியியலாளர் மற்றும் உத்தியோகஸ்தர்களையும் அழைத்துவந்து காண்பித்து இம்மக்களையும், ராசாவின் தோட்டப் பகுதி மக்களையும் ஒன்றிணைத்து சிரமதான அடிப்படையில் பிரதான வாய்க்காலை வெட்டித்திறந்து வெள்ள நீர் குளத்திற்கு சென்று அங்கிருந்து கடலுக்குச் செல்லும் வகையில் மும்முரமாகச் செயற்பட்டனர்.

ஈழமாணவர் பொது மன்றத்தின் இச் சேவையை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

## கோவில் வரலாற்று நூல் வெளியீடு

வண்ணார்பண்ணை ஸ்ரீ பூரணா புட்கலாமபா சமேத ஐயனார் கோவில் வரலாற்று நூல் வெளியீட்டு விழா இன்று நண்பகல் 12-00 மணிக்கு ஓய்வுபெற்ற நீதிபதி க. வை. நவரத்தினம் தலைமையில் ஐயனார் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்த, யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. க. உமாமகேஸ்வரன், திரு. கோ. பொன்னுச்சாமி, வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரின் பாராட்டுரையும் இடம்பெறும். பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. ந. சிவராசா முதற் பிரதியைப் பெறுவார்.

### வடக்கும்...

— 1-ஆம் பக்கத் தொடர்

ழர் அமைப்புகளின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

திரு. பண்டாரியை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழம் தேசிய விடுதலை முன்னணி, 'புளொட்' ஆகியன சந்தித்துப் பேசின.

தீர்வு தொடர்பாக கருத்துக் கணிப்பு நடவடிக்கையை தம்மால் ஏற்க முடியாதென தமிழர் அமைப்புகள் திரு. பண்டாரியிடம் ஒருமித்த குரலில் தெரிவித்தன.

போர் நிறுத்த உடன்பாட்டில் இலங்கை இராணுவத்திற்கும், அரசுக்கும் உண்மையான அக்கறையில்லை என்பதற்கான ஆதாரங்களாகக் கடந்த இருவாரங்களில் வடக்கு, கிழக்கில் நிகழ்ந்த ஆயுதப்படையின் போர் நிறுத்த மீறல் நிலவரத்தை விளக்கும் அறிக்கை ஒன்றையும் அவை திரு. பண்டாரியிடம் சமர்ப்பித்தன.

### வடபகுதி....

-1-ஆம் பக்கத் தொடர்

கையும் எடுத்து வந்தனர்.

ஆனால் தற்போது அந்த நிலை இல்லாததால் இவ்வாறு தரமில்லாத பாண் தயாரிக்கப்படுகின்றன.

சில இடங்களில் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் நடத்தியசோதனைகளின்போது ஒரு றாத்தல் பாண் முன்னூறு கிராம் கொண்டதாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### கண்ணிவெடி....

—1-ஆம் பக்கத் தொடர்

றுக்காலை இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தில் ஆயுதப்படையினரின் ஜீப் வண்டி சிக்கியதால் அதில் பயணம் செய்த ஒருவர் காயமடைந்தார்.

### டில்லி ......

மில்லையென இத்தகவல்கள் மேலும் கூறுகின்றன.

பேச்சுவார்த்தை நேற்று ஒத்திவைக்கப்பட்டதால் தமிழீழக் குழுக்கள் அனைத்தும் நாளை சென்னைக்குத் திரும்பலாமெனவும் டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நல்லூரில் நடந்த கொள்ளை; வயோதிபர் மீது தாக்குதல்

(இருபாலை)

இளைஞர்களால் தாக்கப்பட்ட 86 வயதுடைய வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இரண்டு மணியளவில் நல்லூர் ஆதீனத்திற்கு அருகாமையிலுள்ள மளிகை கடைக்குச் சென்ற சில இளைஞர்கள் கடைக்குள் படுத்திருந்த 86 வயதுடைய கே. வி. கந்தையா என்ற வயோதிபரை கடுமையாகத் தாக்கி அவரது கடையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இரவு இரண்டு மணியளவில் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடைக்கு வந்து தம்மை எழுப்பியதாகவும், எங்கே பணம் என்று கேட்டுத் தாக்கியதுடன், கண்ணாடி அலுமாரிகளையும் அடித்து நொருக்கினார்களாம்.

ஐம்பது வருடமாக தாம் அரும் பாடுபட்டு சேர்த்த பணத்தை இவ்விளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் கொள்ளையடித்த பணத்தின் பெறுமதி ஒரு லட்சமாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

### முழுங்காவில் ...

—1ஆம் பக்கத் தொடர்

பிடித்த இவ் அரசின் இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்வதும் பின் அவர்களை பயங்கரவாதிகள் என அறிக்கை விடுவதும் அன்றாட வழமையாகிவிட்டது."

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தமிழீழ அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

எமது தமிழீழப் போராட்டத்தையும் மக்ள் எழுச்சியையும் திசைதிருப்பி மழுங்கடிக்கும் நோக்குடன் சிறீலங்கா இனவெறி அரசு செயற்பட்டுவருகிறது. சிறீலங்கா இராணுவம் தமிழீழ எல்லைப் பகுதியில் செய்யும் அராஜகங்கள், அட்டூழியங்களை மூடி மறைப்பதற்கு இந்த அரசு யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, யுத்தகண்காணிப்புக் குழு போன்ற போலித்திரைகளை முன்வைத்துள்ளது.

அண்மைக் காலத்தில் திருமலை, மட்டுநகர், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியான படுகொலைகள் எத்தனை! சொத்துக்கள் இழந்து அகதிகள் ஆக்கப்பட்ட அப்பாவி மக்கள் எத்தனை! இத்தனை அராஜகங்களையும் செய்துவிட்டு பழியை விடுதலை இயக்கங்கள்மேல் போடுவதற்கு அரசின் ரூபவாஹினி, ரேடியோ, லங்காபுவத் போன்றவை மிகவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

ஆனால் இன்று விடுதலையை விரும்பிய எத்தனையோ பொதுஸ்தாபனங்கள் தோன்றி மக்கள் முன் செயற்பட்டு வருகின்றன. இவ் அரசின் போலிச் செயல் திட்டத்தை அம்பலப் படுத்த அவர்கள் எல்லோரும் முன்வரவேண்டும். விடுதலை இயக்கங்கள் மட்டும்தான் செயற்படவேண்டும், நாம் பார்வையாளர்கள் என்று பொதுமக்களாகிய நீங்கள் எண்ணக்கூடாது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது,

### யுத்தநிறுத்த ...

—1-ஆம் பக்கத் தொடர்

முடித்துக் கொண்டு குழு கொழும்பு திருப்பும் வழியில மொரவேவாவிற்குச் சென்று காயமடைந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு சென்றது.

### கிரிக்கெட்

## பாகிஸ்தான் 9 விக்கட் - 294

பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் பாகிஸ்தானில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் நேற்று பாகிஸ்தான் ஒன்பது விக்கட்டுகளை இழந்து இருநூற்று தொண்ணூற்று நான்கு ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை முதலில் விளையாடி சகல விக்கட்டுக்களையும் இழந்து நூற்று அறுபது ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டம் இன்று மூன்றாவது நாளாகத் தொடரும்.

### பரந்தன்...

... 1-ம் பக்கத் தொடர்

தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

இதே வேளை மதுரையிலுள்ள தமிழீழ தகவல் நிலயத்தினரின் அறிக்கையை மேற்கோள்காட்டி பரந்தனில் ஐவர் கொல்லப்பட்டதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

### பாதிப்புற்ற....

... 1-ம் பக்கத் தொடர்

ஒன்று கடந்த 14ஆம் திகதிய எமது பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இச் செய்தியைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னரும் பலர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர்.

இதற்காக இதுவரை விண்ணப்பிக்காத பரீட்சார்த்திகள் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக தமது விண்ணப்பங்களை யாழ். திட்டமிடல் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

12ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார் என்பதையும் கவனத்திற் கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### மொரவேவா....

... 1-ம் பக்கத் தொடர்

இச்சம்பவத்தில் காயமடைந்த சுமார் எட்டுப்பேர் திருமலை ஆஸ்பத்திரியிலும், அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 09-11-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336